நாள்.11.03.2026

**அசல் வழக்கு எண். 49/2024**
**பெயர். பெருமாள்**

**த.பெ. வடிவேல்**

**வா.சா.1– பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகளோ வேறு நபர்களோ எங்கள் இடத்தில் தடை செய்யகூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1,2 பிரதிவாதி என் உறவினர்களா என்றால் ஆமாம். என் தந்தையின் அண்ணன் மாணிக்கம் அவர்களின் மகள் பிச்சையம்மாளை 1ம் பிரதிவாதி திருமணம் செய்துள்ளார். 2 ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மகன். வழக்கு சொத்தை நான் கிரையம் வாங்கவில்லை என்றால் ஆமாம். வழக்கு சொத்தை நான் அனுபவிக்கவில்லை என்றால் நான் தான் அனுபவிக்கிறேன். வழக்கு சொத்தை 1ம் பிரதிவாதியிடம் என் அப்பா கிரையம் பேசி விற்றுவிட்டார் என்றால் இல்லை. வழக்கு சொத்தை என் அப்பா 1984ம் ஆண்டு சண்முகம் என்பவருக்கு 7000க்கு பெந்தகம் வைத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என் அப்பாவால் பெந்தகத்தை மீட்க முடியவில்லை என்பதல் 1ம் பிரதிவாதி பணத்தை கொடுத்து மீட்டுகொண்டார் என்றால் உண்மைதான். அந்த தொகையை 1ம் பிரதிவாதிக்கு என் அப்பா கொடுக்க முடியாததால் அவருக்கே அந்த சொத்தை கொடுப்பதாக சொல்லி ஒப்பந்தம் செய்தார் என்றால் ஆமாம். அது முதல் வழக்கு சொத்தின் அனுபவத்தை 1ம் பிரதிவாதி அடைந்து வருகிறார் என்றால் இல்லை. எனக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட விரோதத்தின் காரணமாக சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.